# History of Valvai by Thamilnee Pon Sivakumaran

## வல்வெட்டித்துறையின் "சமூகச்சிற்பி" திருமேனியார்யார் வெங்கடாசலம்.

1867 ஆம் ஆண்டு சங்கத்தாபனம் செய்து வல்வட்டித்துறை வைத்தீஸ்வரன் கோயிலைக்கட்ட ஆரம்பித்தவாரே வெங்கடசலம் பிள்ளையவர்கள். வல்வெட்டித்துறையின் புகழ்பெற்ற கடல்வணிகக்குடும்பத்தில் உதித்த ஐயம்பெருமாள் வேலாயுதர் வழிவந்த "திருமேனியாரின்" மைந்தனாக 1822ஆம் ஆண்டு மார்கழி மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை இவர் வல்வட்டித்தறையில் அவதரித்தார். இது கலியப்பதம் 4924இற்கும் சாலிவாகன சகாப்தம் 1745இற்கும் சமனாகிய சித்திராபானுஆண்டு மார்கழித்திங்கள் 6ம்நாள்ஆகும். இவர்பிறந்த கிரகநிலையானது சிங்க லக்கனத்திற்குஉரியதாகும். சோதிடநூற்ப்படி சூரியன் என்னும் கிரகத்திற்கு இராசிசக்கரத்தில் உள்ள ஒருவீடு சிம்மம். சூரியன் நவக்கிரகங்களிற்கு நாயகராக விளங்குபவர் மட்டுமல்ல. பால்வீதியில இருக்கும் பல்லாயிரம் நட்சத்தரகூட்டங்களிலுமே சூரியக்குடும்பமே பெரியது. உலகின் பேரொளியாகவும் யாரும் அண்டமுடியாத அக்னிக்கோளமாகவும் விளங்குவது சூரியக்கிரகமே ஆகும். கிரகம் என்பது இருத்தல் என பொருள்படும். இத்தகைய சூரியனின் பார்வை பெற்ற சிங்க இலக்கணத்தில் பிறந்த இவருடைய முன்னோர்களும் பின்னோர்களும் பெருமைபெற்ற வரலாறுடையவர்கள்.

இவ்வாறு பெருமைமிகு குடும்பத்தில் அவதரித்த இவரின் பிறப்பை நூறுவருடங்களிற்கு முன் வாழ்ந்தவல்வையின் தமிழ் அறிஞரும் வல்வெட்டித்துறை வைத்திலிங்கப்புலவரின் சகமாணவரும் சிவசம்புலவரின் மாணாக்கனுமான பொன்னையாஉபாத்தியாயர் என்றழைக்கப்பட்ட புலவர் நா.பொன்னம்பலம்பிள்ளை அவர்கள்

மல்லிகை முல்லை மலரிருவாட்சியாம்
நல்லபைந்தருநிறை நந்தவனமுஞ்
சூழ்ந்திடவதிவளந் துலங்குமிவ்வல்வையில்
ஆழ்ந்திடு கடல்சூழ்வனின் மாக்கள்
வல்வினைப்பிறவியா மறிகடல்நீந்தி
எல்லையில்லா பேரின்பந்துய்ந்திட
கருமேனிகொள்ளாக் கரையறுபுண்யத்
திருமேனிவள்ளள் செய்தவத்துதித்த
தருவேங்கிடநிதித் தாரைபொழிகைத்
திருவேங்கடாசலச் சீதெந்தரியசிகாமனி!



Valvai Sivan Kovil

என சிறப்பாகப் பாடியுள்ளார்.

திருமேனியாருடைய முதல் மைந்தனாக அவதரித்த இவருக்கு குழந்தைவேற்பிள்ளை தம்பிப்பிள்ளை தம்பையா இராசசாமி அப்பாச்சாமி என ஐந்து இளையசகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தனர். இதனால் மூத்தவர் என்கின்ற காரணப்பெயர் கொண்டு **"பெரியதம்பி"** என அழைக்கப்படலானார். இளமைப்பருவம் முதல் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய இவரும் தமது பரம்பரைத்தொழிலான கடல் வணிகம் மூலம் பெரும்பொருள் ஈட்டியவர்களில் முதன்மையானவர். உரியபருவம் வந்ததும் திருமணம் முடித்து குடும்பஸ்தரான இவருக்கு வேலுப்பிள்ளை திருமேனிப்பிள்ளை. அருணாசலம் எனும் மூன்று ஆண்மக்களும் பொன்னம்மா எனும் ஒரு பெண்மகவும் வாரிசாகினர்.

ஆரம்பத்தில் தென்கிழக்காசிய நாடான மலேசியாவின் துறைமுகநகரங்களான பினாங். போர்ட்வேலோ பன்கூர் கிள்ளான் என்பவற்றுடன்அரிசி வர்த்தகத்தில் ஈடுபட்டார். இக்காலத்தில் காலியில் அமைந்திருந்த சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தில் பலதிருப்பணிகளை மேற்கொண்டார்.

1850 – 1870 காலப்பகுதியில் இந்தியாவின் தென்மேற்கு மாநிலமான மலையாளநாடென்று அழைக்கப்பட்ட இன்றைய கேரளாவிற்கும் யாழ்ப்பணத்துக்குமான புகையிலை வியாபாரமானது பெருவிருத்தியடைந்தது. தந்தைவழியில் கப்பல் உரிமையாளராகவும் சிறந்த கடலோடியாகவும் இருந்ததனால் மலையாளத்தேச வியாபாரிகளும் இந்தியாவின் நாட்டுக்கோட்டை செட்டிகளினாலும் யாழ்ப்பாணத்தில் கொள்வனவு செய்யப்படும் புகையிலையையும் அதன் உற்பத்திப்பொருளான சுருட்டையும் மலையாள நாட்டின் கொச்சினிற்கும் திருவிதாங்கூருக்கும் ஏற்றிச்சென்று கொடுப்பதன் மூலம் அதிகவருவாயைப் பெருக்கினார்.

1856ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு சொந்தமான “king of atlantic” என்ற கப்பல் திருகோணமலைக்கு வடக்காக முல்லைத்தீவுக்கு கிழக்கே வங்கக்கடலில் மூழ்கிவிட்டது. ஆங்கிலேயரின் கட்டிடநிர்மாணப்பணிகளிற்காக கொண்டு வரப்பட்ட சுண்ணாம்பு மூடைகளுடனேயே அக்கப்பல் மூழ்கியிருந்தது. பல நாட்களாக அதனை மீட்க முயற்சிசெய்த கப்பலின் உரிமையாளரான ஆங்கிலேயர்கள் செய்வதறியாது மூழ்கிய நிலையிலேயே அதனைக்கைவிட முடிவு செய்தனர். ஆங்கிலேய நாட்டிலிருந்து இலங்கை வரை பயணம் செய்த இரட்டைப்பாய்மரக்கப்பலான அதனை மூழ்கிய நிலையிலேயே விலைக்கு வாங்கிய வெங்கடாசம்பிள்ளை எல்லோரும் ஆச்சரியப்படும் படியாக அதனை நீரிலேயே மிதக்கவிட்டார். கப்பல்சாத்திரம் என்னும் மாலுமிசாஸ்த்திரத்திலும் வானசாஸ்த்திரத்திலும் பூரணஅறிவுகொண்ட இவர் இதற்காக பல நாட்கள் முல்லைத்தீவில் கள்ளப்பாடு என்னும் கடக்கரைப் பிரதேசத்தில் தங்கியிருந்து மேற்படிமூழ்கிய கப்பலை மீட்டெடுக்கும் முயற்ச்சியில் ஈடுபட்டார். ஆரம்பத்தில் தன்னிடம் இருந்த சுழியோடிகள் மூலமாக கப்பலில் இருந்த பொருட்களை சிறிதுசிறிதாக வெளியே எடுத்தார். கப்பலில் ஏற்றப்பட்டிருந்த சுண்ணாம்புமூடைகளை கடலில் இட்டு கப்பலின் பாரத்தைக்குறைத்தார். பின்னர் மூழ்கிய கப்பலுடன் நேராகப்பிணைக்கப்பட்டு மிதந்துகொண்டிருக்கும் பாரியமரக்குற்றிகளை பக்கவாட்டாக நகர்த்துவதன் மூலம் மூழ்கிய கப்பலை நீர்மட்டத்திற்கு கொண்டு வந்து ஆங்கிலேயரும் மெச்சும் வகையில் தனது பொறிமுறை அறிவினைப் பயன்படுத்தி வெற்றிகண்டார். “அத்திலாந்திக் கிங்” என்னும் அக்கப்பல் மூழ்கியதும் அதிலிருந்த சுண்ணாம்புமூடைகளை வெளியே கொண்டு வரமுடியாமல் அச்சுண்ணாம்புகள் அவ்விடத்திலேயே கடலில்இடப்பட்டன. முல்லைத்தீவுக்கடலில் இன்றும்கூட **“கப்பல்தட்டு”**என அவ்விடம் அழைக்கப்படுகின்றது.

இக்காலத்தில் தன்னைப்போன்ற கடல்வணிகனான **“மாநாயக்கன்”**னின் மகளான கண்ணகியின் பெயரில் சிறுகொட்டிலாக இருந்த **“வற்றாப்பளை கண்ணகி அம்மன்”** ஆலயத்தை கற்கட்டிடமாக இவர் புனரமைத்ததுடன் கோயிலுக்கு அண்மையில் பக்தர்கள் தங்குவதற்காக ஒருமடத்தையும் அமைத்திருந்தார். அத்துடன் கள்ளப்பாட்டில் இருந்து வற்றாப்பளைவரை உள்ள வீதியில் ஒவவொருவருடைய வருணாச்சிரமங்களுற்கு ஏற்றதான மடங்களை அமைத்து பக்தர்கள் தங்கிச் செல்வதற்கான வசதிகளையும் முறையான வீதிப்போக்குவரத்துகள் அற்ற அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல்மூலமாகவே வரும் பக்தர்கள் வற்றாப்பளை கண்ணகியம்மனை வழிபடும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். அத்துடன் கள்ளப்பாட்டில் ஒரு பிள்ளையாா கோயிலையும் அமைத்தார். பாய்க்கப்பல் மூலமாகவும் நடந்தும் கதிர்காமம் செல்லும் யாத்திரிகள் ஓய்வெடுப்பதற்காக அங்கும் ஒருமடத்தினை அமைத்தார்.

மீழ்க்கப்பட்ட கப்பலை வல்வட்டித்துறைக்கு கொண்டு வந்து தமது பரம்பரை வாடியில் (வாடி என்பது கப்பல்கள் மற்றும் படகுகள் உற்பத்தி செய்யவும் அவைகளைப்பழுதுபார்க்கவும் பயன்படுத்தும் இடமாகும்) பழுது பார்த்து மீண்டும் கடல் பிராயாணம் செய்யும் வகையில் மாற்றியமைத்தார். இவ்வாறான அவருடைய வாடியமைந்திருந்த இடமே இன்றைய முத்துமாரியம்மன் கோவிலுக்கு வடக்காக அமைந்திருக்கம் வாடியெழுங்கைப் பகுதியாகும். “அத்திலாந்திக் கிங்” என அழைக்கப்பட்ட இக்கப்பல் கெச்(ketch)சுக் கப்பல் எனப்படும் வகையைச்சேர்ந்தது. இவ்வகைக்கப்பல்களின் பாய்மரங்களின் உயரம் அதுவரை இலங்கை இந்தியா போன்றகீழைத்தேச நாடுகளில் கட்டப்பட்ட சமஅளவு கொண்டபாய்மரங்கள் போலன்றி முன்னிருக்கும் பாய்மரம் எப்பொழுதும் உயர்ந்ததாகவே காணப்படும். இதனால் பருவக்காற்றுக்களின் மூலம் நகரும் கப்பல்களில் ஏனையகப்பல்களை விடவிரைவாக நகரும் தன்மை கொண்டவையாக இவைவிளங்கின.

இவ்வாறு ஆங்கிலேயரால் கட்டப்பட்ட கப்பலைவாங்கி திருத்தியதன் மூலம் ஆங்கிலேயரின் கப்பல் கட்டும் நுட்பட்தை நன்கு அறிந்து கொண்டார். இத்தகைய பட்டறிவின் மூலம் எமது பாரம்பரிய கப்பல் கட்டும் முறையினைச் சீர்திருத்தினார். இதன் மூலம் புகழ்பெற்றிருந்த வல்வட்டித்துறையின் கப்பல்க்கட்டுகலையினை மேலும் மொருகூட்டினார். இவ்வாறு எமது நாட்டின் கடலையும் அது தொடர்பாக இவருக்கு இருந்த நுண்ணிய அறிவையும் பொதுச்செயலில் இவருக்கு இருந்த பரந்த மனப்பாங்கையும் கண்ட ஆங்கிலேயரும் தமது கடல்பயணத் தேவைகளுக்காக பலசமயங்களில் இவரின் உதவியைப் தொடர்ந்து பெற்றுக்கொண்டனர். இதுபற்றிய சிறுகுறிப்பொன்று முருகர் குணசிங்கம் என்பவரால் எழுதப்பட்ட "இலங்கையில் தமிழர் முழுமையான வரலாறு" என்ற புத்தகத்தில் 343 ஆம் பக்கத்தில் காணப்படுகின்றது. அது பின்வருமாறு

"திரு சாண்டஸ்(sanders) உடன் சாவகச்சேரியிலிருந்து போதகர் ஹன்ட்(HAND) இரு வினாவிடை உபதேசிமார் ஒரு ஆசிரியர் என நான்கு சுதேசிகளும் ஆனி 16ந் திகதி வல்வட்டித்துறையிலிருந்து மட்டக்களப்புக்கு பயனித்து எமது மத்திய நிலையமான புளியந்தீவில் தங்கினர்." எனத் தொடர்ரும் இக்குறிப்பானது 1864ம் ஆண்டிற்கு உரியது. இது அமெரிக்க கிறிஸ்தவமிசனரிமாருடைய(**A.C.M) report voi.7 reei 451 – 1857 – 1871 batticaioa 20oct1864** என காணப்படுகின்றது. 1864 இல் வல்வட்டித்துறையின் எசமானாக விளங்கிய இவரைவிட வேறுயாரால் இது முடியும்.

தந்தையிடமிருந்து இரண்டு கப்பல்களை மட்டுமே பெற்றிருந்த இவர் சிவன்கோயிலைக் கட்ட ஆரம்பித்த காலத்தில் 12 கப்லகளுக்கு சொந்தக்காரனாக இருந்தார். என 1967ம் ஆண்டு வெளியிடப்பட்ட சிவன்கோயில் குடமுழுக்கு விழா மலரில் 17ம் பக்கத்தில் வல்வையின் மூத்தஎழுத்தாளரும் விழாமலரின் ஆசிரியருமாகிய பண்டிதா சங்கர வைத்திலிங்கம். எழுதுயுள்ளமை இங்கே நினைவூட்டத்தக்கது.

பன்னிரண்டு கப்பல்குளுக்கு அதிபதியாக இருந்த வெங்கடாசலம் பிள்ளையவர்கள் 1852இல் பிரிட்டன் பர்மாவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து பர்மாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகத்திலும் கால் பதித்து வெற்றிக்கொடி நாட்டியவர்களில் இவர் முதன்மையானவராகும். இவரால் **"கெச்சுக்கப்பல்கள்"** வல்வெட்டித்துறையில் கட்டப்படத்தொடங்கியதும் பர்மா வியாபாரம் மேலும்சூடுபிடித்தது. ஆரம்பத்தில் இங்கிருந்து சென்ற கடலோடிகளும் வியாபாரிகளும் அங்கே தரித்திருந்து அரிசயையும் நெல்லையும்கொள்வனவு செய்வதினால் கப்பல்கள் அங்கிருந்து திரும்புவதில் ஏற்படுவதில் ஏற்படும்காலதாமதத்தை தவிர்து செல்லும் கப்பல்களில் உடனடியாகவே பொதிகளை ஏற்றக்கூடியவாறு எம்மவர்கள் சிலரை அங்கேயே தங்கவைத்தார். இவர்கள் எப்பொழுதும் "மேலாளர்"களாக அங்கே தங்கியிருந்து உற்பத்தியாளர்களிடமும் வியாபாரிகளிடமும் பேரம்பேசி குறைந்த விலைகளில் அரிசியை வாங்கி மூட்டைகளாக கட்டிவைப்பர். வல்வெட்டித்துறையில் இருந்து செல்லும் கப்பல்கள் உடனடியாக அவைகளை ஏற்றிக்கொண்டு வல்வெட்டித்துறைக்கு திரும்பிவிடும். இவ்வாறு மேலாளர்களாக இவரால் அனுப்பப்பட்ட ஊழியர்கள் தங்குவதற்காக அரக்கனில் ஓர்இடத்தை வாங்கி மடம் கிணறு என்பவற்றுடன் அவ்விடத்தில் ஒருமுருகன் கோவிலையும் இவர் உருவாக்கினார். என அறியப்படுகின்ற:து. 1853 முதல் பர்மா அரிசி வியாபாரத்தில் கொடிகட்டிப்பறந்த இவரைத்தொடர்ந்து வல்வெட்டித்துறையைச் சேர்ந்தபலரும் இவ்வியாபாரத்தில் குதித்தனர். இவ்வாறாக வல்வெட்டித்துறை கடலோடிகளின் அதீததொடர்பினால் பர்மாவின் அரக்கன். இறங்கூன் துறைமுகங்களில் இருந்து வல்வெட்டித்துறைக்கு நேரடியாகவும. விரைவாகவும் வரும் கடற்பாதை உருவாயிற்று. ஆரம்பத்தில் கோரமண்டலக்கரை எனஅழைக்கப்படும இந்தியாவின் கிழக்குக்கரைதுறைமகங்களை ஒட்டியே பர்மாவை கப்பல்கள் சென்றடைந்தன.இப்புதிய கடற்பாதை கண்டுபிடிக்கப்பட்டவுடன் வங்காளவிரிகுடாவின் 9346 அடி ஆழமுள்ள பகுதியை வல்வெட்டித்துறை கப்பல்கள் சர்வசாதாரணமாக ஊடறுதத்து பயணம் செய்தன. பதினோராம்நூற்றாண்டில் இராஜேந்திரசோழனது காலத்தில் "சோழர்களின்ஏரி" என வங்கக்கடல் வர்ணிக்கப்படுவதுண்டு. அதனையும்விட அதிகமாகவே 19ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியிலும் 20 நூற்றாண்டின் முன்னரைப்பகுதியிலும் வல்வெட்டித்துறை கப்பல்களே வங்காளவிரிகுடாவை முழுமையாக ஆக்கிரமித்திருந்தன. இத்தகைய நிலைக்கு ஈழத்தமிழரின் **"கடலாளுமையை"** வளர்த்த பெருமை "பெரியவர்"வெங்கடாசலம்பிள்ளையையே சாரும்.

ஏற்கனவே இந்தியாவின் நாட்டுக்கோட்டைச் செட்டிமாருடனும் ஆந்திராவில் நாயுடுகளுடனும் வர்த்தகத்தொடர்புகளை வைத்திருந்த இவர் பர்மாவின்புகழ்பெற்ற தேக்குமரங்களையும் புட்டரிசி என்னும் சிறந்த அரிசினையும் தனது கப்பலகள் கொண்டுவந்து பெரும் பொருள் ஈட்டியதுடன் தானதர்மங்கள் செய்வதிலும் முன்னின்றார். அத்துடன் எமது மக்களின் உணவுத்தேவையினை பூர்த்திசெய்வதிலும் பெரும் பங்காற்றினார். இவ்வாறு பல கப்பல்களை வைத்திருந்து கடல்வணிகம் செய்த இவரின் கப்பல்கள்.

அரு(ர)க்கன்போர்மன் வந்தேரிரங்கூன்
காக்கை நாடு வங்காளஞ் சென்னை
கூடலூர் கொற்றங் குடிநாகைத்தலம்
திண்டுக்கல்காரைக்கால் புதுச்சேரி
பறங்கிப்பேட்டை பம்பாய்குற(றி)ச்சி
மலையாள மாலபள்ளிதூத்துக்குடி
கொச்சிகள்ளிக்கோடு கொல்லம்
தகைசெறி திருவனந்தபுரம் கொழும்பு
மானார்(நகர்) திருகோணமலை மட்டக்
களப்பெனும் பலபதி



Annapoorani Kappal

ஆகிய இடங்களிற்கு சென்று வர்த்தகத்தில்ஈடுபட்டன. என கெச்சுக்கப்பலின் தண்டயைல் ஆகப்பணியாற்றிய நா.வேலுப்பிள்ளையின் சமரகவியில்(1904)குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலத்தில் வல்வட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் மணியமாக விளங்கிய இவர் கோயிலின் சுற்று மதிலைக்கட்டியதுடன் கோவிலுக்கு தெற்குப் புறமாக ஒரு குளத்தையும் வெட்டிவித்தார் பன்னிரண்டு கப்பல்களுக்கு அதிபதியாக விளங்கியஇவரிடம் கப்பல் தண்டயல்(கப்றின்) சுக்கானியர் (மாலுமிகள்) பண்டாரங்கள் (சமையல்காரர்) கிலாசுகள் (பாய்.மரம்கட்டுவோர்) எனப் பலர் வேலைசெய்தனர். அதுபோல் கப்பலுடன் சம்மந்தப்பட்ட பொருட்களை ஏற்றுவது இறக்குவது எனத் தொழில் புரிந்த பலரும் கப்பலுக்கு தேவையான கயிறுகள் திரிப்போர் மற்றும் கப்பல் வாடியில் வேலை செய்தோர் என ஏறத்தாழ 300 போர்களுக்கு மேல் இவரிடம் ஊழியம் புரிந்தனர். இவ்வாறு இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன் ஊரில் இருந்த 300பேருடைய குடும்பத்தினரின் வாழ்க்கையினை இவர் தாங்கியுள்ளார். 1946ம் ஆண்ட எடுக்கப்பட்ட குடிசனமதிப்பீட்டு கணக்கெடுப்பின்படி வல்வட்டித்துறை மக்களின் மொத்தத்தொகை 6015 என 30.7.1950 இல் வித்துவான் வ.மு கனகசுந்தரம் வீரகேசரிவார வெளியீட்டில் எழுதிய “வல்வட்டித்துறையின் வரலாறு”என்னும் கட்டுரை தெரிவிக்கின்றது. இதில் சைவர்கள் 5035 பேரும் கிறிஸ்தவர்கள் 85 பேரும் உள்ளடக்கப்பட்டனர். அப்படியானால் அதற்கு 100வருடங்களுக்கு முன் எத்தனைபேர் வல்வட்டித்துறையில் வாழ்ந்திருப்பர் அவர்களில் 300குடும்பத்தில் எத்தனை அங்கத்தவர்கள்? என கணக்கெடுத்தால் அம்மக்களுக்கான இவரின் சேவை என்பதை அறப்பணிப்யென்றோ அல்லது அளவிடற்கரியதுஎன்றோ கூறலாகது. அம்மக்களுக்கு அனைத்துமே இவராகத்தான் இருந்திருக்கும். அதனால்தான் தன்னிடம் வேலை செய்தவர்களுக்கு எசமானாக விளங்கியது போலவே ஊருக்கும் எசமானகவே மக்களால் கருதப்பட்டு “எசமான்” என அழைக்கப்டலானார். இன்றும் கூட அவர் வாழ்ந்த வீடு “எசமான்வீடு” என்றே அழைக்கப்படுகிறது. இதன்மூலம் வல்வட்டித்துறை மக்களினை வழிநடத்தும் தலைமைப்பதவி தானாகவே கைவரப்பெற்றார். அவர் மறைந்து நூற்றிப்பதினெட்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவர் வாழ்ந்த வீடு எசமான்வீடு எனவும் அவருடைய வழிவந்த குடும்பத்தினர் “எசமான்குடும்பத்தினர்” எனவும் அளவிறந்த மரியாதையுடன் வல்வெட்டித்துறை மண்ணில் இன்றும் அழைக்கப்படுகின்றனர். என்பதனைக் கொண்டே அந்த மண்ணில் அவருடைய ஆளுமையானது எவ்வளவுதூரம் ஆழவேருன்றி இருக்கின்றது என்பதனை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஒரு கிராமத்தின் அல்லது பட்டினத்தின் முதல் மனிதராக முன்னுரிமை பெற்றிருந்த வெங்கடாசலம்பிள்ளை அவர்களின் வாழ்வில் 1867ஆம் ஆண்டு பாரிய மாற்றம் உண்டாயிற்று. வல்வட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் தர்மகத்தா சபைத்தலைவர் என்னும் கோயில் மணியமாக அக்காலத்தில் கடமையாற்றிவந்த இவர் கண்ட கனவில் “இவரது தந்தையார் வல்வட்டித்துறையில் சிவபிரானுக்கு கோயில் ஒன்றை எடுத்துத்தருமாறுபணிததிருந்தார்.

இவரது தந்தையராகிய “திருமேனியார்” மறையும் போது வல்வட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் தர்மகர்த்தாவாக இருந்தவர். அவருடைய பூட்டனாரான திரு. **“வேலர்”** ஆரம்பித்து வைத்த நெடியகாட்டு திருச்சிற்றம்பலப்பிள்ளையார் கோவில். புட்கரணிப்பிள்ளையார் கோவில். மற்றும் வைகுந்தப் பிள்ளையார் கோவில் எனும் நான்கு கோயில்களுக்கும் மணியமாக இருந்து பெருந்தொண்டு ஆற்றியவர்.

கடலோடுவதால் கிடைத்த பெரும் செல்வத்தில் திளைத்த வல்வட்டித்துறையில் திரும்பிய இடமெல்லாம் கோயில்களே எனினும் அவைகளெில் பெரும்பாலனவை பிள்ளையார் கோவில்களாகவும் வைரவர் கோயில்களாகவுமே காணப்பட்டன. முழுமுதற்கடவுளான சிவபிரானை வழிபடுவதாயின் பருததித்துறையில் இருந்த பசுபதிஸ்வரர் கோவிலுக்கே மக்கள் செல்லவேண்டியிருந்தது. வல்வைமக்களின் வாழ்வே தனது வாழ்வாக நினைத்து வாழ்ந்து வந்த திரு. வேங்கடாசலம்பிள்ளைக்கு இது குறையாகவே பட்டிருக்கும் இந்த நினைவே கனவாக வெளிவந்து அவரின் எண்ணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும்.

அக்கனவினைக்கண்ட நாள்முதலாய் பெரியதம்பியார் இதேநினைவிலேயே இருக்லானார். சிவன்கோவிலை எங்கே அமைப்பது என தவிக்கலானார்**!** இக்காலத்தில் இவரிடம் ஊதியம் புரிந்த கம்பர்மலையைச்சேர்ந்த ஒருவர் தனது வேலைமுடித்து தினமும் முத்துமாரியம்மன் கோவிலுக்கு தெற்குப்புறமாக அமைந்திருந்த கற்களும் பற்றைகளும் பலவித மரங்களும் வளர்ந்திருந்த நடைபாதைவழியாக வீட்டுக்கு திரும்பிச்செல்வது வழக்கம். மின்சாரவசதியற்ற அக்காலத்தில் முன்னிரவில் சிறுபற்றைகளினுடாக நடந்து சென்றஅவர் அப்பகுதியில் நின்ற கொன்றை மரத்தடியில் சிறிய வெளிச்சம் ஒன்றைக்கண்டார். தொடர்ந்து சிலநாட்கள் இவ்வாறு தான்கண்ட விபரத்தை தனது எசமானான வெங்கடாசலம்பிள்ளையிடம் அவர்கூறினார். நம்பமுடியாத வெங்கடாசலம் பிள்ளையும் அடுத்தநாள் அந்த ஊழியரையும் உடனழைத்துக்கொண்டு அவ்விடத்துக்கு சென்று பார்த்தார் ஆம் அந்த ஊழியர் காட்டிய இடத்தில் நின்ற கொன்றைமரத்தடியில் பசுவின் சாணம் எரிந்து கிடக்கக்கண்டார். அத்துடன் கொன்றைமரத்தின்பூக்கள் எல்லாம் அதனைச்சுற்றி விழுந்திருக்கவும்கண்டார். அவ்விடத்தில் நின்று நிமிர்ந்து பார்த்தபோது நேர்வடக்காக இருந்த முத்துமாரியம்மன்கோவில் மூலஸ்தானத்தைக்கண்டார். தந்தையார் கனவில் சொன்ன பொருளைப்புரிந்து கொண்ட வெங்கடாசலம்பிள்ளையும் அவ்விடத்திலேயே சிவபிரானுக்கு கோயில் கட்டமுடிவெடுத்தார்.

கப்பல் வணிகம் மூலம் பெரும்பொருள்ஈட்டி புகழ்பெற்ற வர்த்தகராய் இருந்த வெங்கடசலம்பிள்ளை முன்பிருந்த சைவநயன்மார்கள் போன்று எக்கணத்திலும் முழுமுதற்கடவுளாம் சிவபிரானை நினைத்து அவருக்கு கோயில் கட்டும் முடிவில் செயற்படலானார். கொன்றைமரத்தில் ஜோதி தோன்றியஇடத்தில் கோயில் அமைப்பதற்கு கொன்றை மரங்கள் நிறைந்திருந்த அம்மன்கோவிலுக்கு தெற்காகவும் புட்கரணிப்பிள்ளாயா கோவிலுக்கு மேற்காகவும் அமைந்திருந்த 60 பரப்புக்**காணியை** விலைக்கு வாங்கிக் கொண்டார். இந்நிலப்பகுதி வெங்கடாசலம்பிள்ளையின் பெரியதந்தையாராகிய் புண்ணியமூர்த்தியாருக்கே சொந்தமாக இருந்தது. அந்நிலப்பகுதியில் கற்பாறைகள் அதிகமாகக்காணப்பட்டன. ஊருக்கே எசமானாக வழிவந்து வாழ்ந்து காட்டிய குடும்பத்தில் வந்த பெரியவர் ஆனாலும் இறைவனுக்கு ஊழியம்புரியும் அடியவனாகி தனது கையினாலேயே பெரும் பாறைகளைப்புரட்டியும் தகர்த்தும் “புட்கரணி” என்னும் அந்நிலத்தைச் செம்மைப்படுத்தினார்.

**“புட்கரணி”** என்பது தாமரை அல்லது தாமரைக்குளம் எனதமிழில் பொருள் தருவதால் அதற்கு அண்மையில் அமைந்திருந்த பிள்ளையார்கோவில் புட்கரணிப்பிள்ளையார் என அழைக்கப்பட்டு வந்துள்ளது. எனினும் பின்நாட்களில் புட்கரணி என்பது புட்டணி என திரிபடைந்துள்ளது. **“தீருவிலக்குளம்”** எனஅழைக்கப்படும் குளமானது முன்பு **தாமரைக்குளம்** என்னும் கருத்தில் புட்கரணிக்குளம் என அழைக்கப்பட்டு ஈற்றில் குளமானது தூர்ந்த காலத்தில் தீர்ந்த அல்லது முடிந்த என்றும் பொருள் தரும் தீரு-என்னும் அடியாகப்பிறந்து வில் எனப்படும் குளத்துடன் கூடி தீருவில் என அழைக்கப்பட்டுள்ளது பின்னாட்களில் ஒரேபொருள்தரும் இரு சொற்களும் வில் **=** குளம் இணைந்து தீருவில் எனப்படவேண்டிய அக்குளம் தீருவிற்குளம் எனவும் குளம் அமைந்துள்ள அப்பகுதி தீருவில் எனவும் இன்று அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு முத்தமாரியம்மன்கோவிலுக்கு தெற்கில் இருந்த மடத்தில் வாழ்ந்த இவர் அங்கிருந்த படியே சிவனுக்கு கொவில் அமைக்கும் வேலையில் இரவும் பகலும் தன்னை ஈடுபடுத்தினார். இவர் 1867ம் ஆண்டு கோயில் கட்டுவதற்காக ஆரம்பிக்கப்படும் சங்கத்தாபனத்தைச் செய்து கோயில் கட்ட ஆரம்பித்தார். இவ்வாறு கோயில் கட்ட ஆரம்பித்த வேளையில் தான் அதுவரை வகித்து வந்த வல்வட்டித்துதுறை முத்துமாரியம்மன் நெடியகாட்டுதிருச்சிற்றம்பலப்பிள்யையார் வைகுந்தப்பிள்ளையார் புட்கரணிப்பிள்ளையார் என்னும் கோயில்களில் மணியம் என்று அழைக்கப்பட்ட **"அறங்காவலர்"** பதவியினை தனது ஒன்றுவிட்ட சகோதரனான அறுமுகத்தா முருகுப்பிள்ளையிடம் ஒப்படைத்துவிட்டு சிவனுக்கு கோயில்கட்டுவதில் தனது முழுநேரத்தையும் செலவிட்டார்.

கோயில் என்பது இந்துக்களின் வணக்கத்தலங்களைக்குறிக்கும் பொதுப்பெயராக விளங்கியபோதும் கோவில் என்பது சிதம்பரத்தின் சிறப்புப்பெயராகும். பல்லவர்காலமான கி.பி 7ம் நூற்றாண்டின் தொடக்கம் இன்றுவரை காசி இராமேஸ்வரம் சிதம்பரம் ஆகிய தலங்களே சிவனுடைய தலங்களில் பெருமைபெற்றவையாக விளங்குகின்றன. காசியிலும் இராமேஸ்வரத்திலும் இறந்தவர்களும் அந்திமக்கிரியை செய்யப்பட்டவர்களும் முத்தியை அடைவார்கள் என்பது ஐதீகம். ஆனால் இவை எல்லாவற்றுக்கும் மேலாக சிதம்பரத்தில் நடராஜப்பெருமானை தரிசித்தவர்களே முத்தியடைவாகள் என்பதே இவ்வாலயத்தின் பெரும் சிறப்பிற்கு காரணமாகும்.

இவ்வாறு பெருமைபெற்ற சிதம்பரம்கோயிலினை அடியொற்றியதாக மூன்றுவீதிகள் கொண்டதாகவும் பிருதிவிலிங்கம் தேயுலிங்கம் அப்புலிங்கம் வாயுலிங்கம் ஆகாயலிங்கம் என்றும் ஐவகைலிங்கங்கள் தனித்தனியாகவும் மூலஸ்தானத்தில் பாணலிங்கம் மற்றும் அண்ணாமலைஈஸ்வரர் மகாவிஸ்ணு என பல வகைத்தெய்வங்களுடன் நவக்கிரகங்களும் வைவநயன்மார்களான திருஞானசம்பந்தர் திருஞாவுக்கரசர் சுந்தரமூர்த்திநாயனார் என்பவர்களுடன் மாணிக்கவாசகசுவாமிகள் என்பவர்களுக்கும் தனித்தனியாக விக்கிரகங்களை பிரதிஸ்டை செய்தே இக்கோயிலினை பெரியவர் வெங்கடாசலம்பிள்ளை அவர்கள் அமைத்தார்.

இச்சிவன்கோவிலின் மூலஸ்தானத்தில் பிரதிஸ்டை செய்யப்பட வேண்டிய மூலலிங்கமான பாணலிங்கத்தை காசியில் இருந்து நேரடியாக கடல்வழிமூலம் வல்வட்டித்துறைக்கு கொண்டுவந்து பிரதிஸ்டை செய்தார். **"பாணலிங்கத்திற்கு"** இயற்கையிலேயே பூணூல் அணிவது போன்ற இரேகை அமைப்பு படர்ந்திருக்கும். ஆயிரம்கல் சிவலிங்கத்திற்கு ஒரு ஸ்படிகலிங்கம் சமன் 12இலட்சம் ஸ்படிகலிங்கங்களிற்கு ஒரு பாணலிங்கம் சமனாகும். பாணலிங்கம் வடித்தெடுக்கப்படுவதில்லை. பிரமா. விஷ்ணு முதலியதேவர்கள் பூஜித்த புண்ணியநதிகளான கங்கை. யமுனை. நர்மதை போன்றவற்றில் இலிங்கவடிவில் இயற்கையாகவே உருண்டோடி வரும் சிறப்பு வாய்ந்ததே பாணலிங்கமாகும்."

இவ்வாறு காசிவரை சென்று இப்புனிதலிங்கத்தைக் கொண்டுவந்தவர் பெரியவர் வெங்கடாசலம்பிள்ளையின் ஒன்றுவிட்ட சகோதரனான ஆறுமுகத்தார் விஸ்வநாதபிள்ளையாகும் இங்குகூறப்பட்ட ஆறுமுகத்தாரும் பெரியவர் வெங்கடாசலம் பிள்ளையின் தந்தையான திருமேனியாரும் உடன்பிறந்த சகோதரர்ஆவார்கள் என்பது இங்கே குறிபிபடத்தக்கது. பாணலிங்கத்தை மட்டுமல்லாது உற்சவமூர்த்தியாகிய நடேசர் மற்றும் சந்திரசேகரர் ஆகியோரின் திருவுருவங்களையும் விஸ்வநாதபிள்ளையவர்கள் காசியில் இருந்து வல்வட்டித்துறைக்கு மிகுந்த பொருட்செலவில் கொண்டுவந்துள்ளார் இங்கு கூறப்படும் விஸ்வநாதபிள்ளையின் மகனான சரவணமுத்துப்பிள்ளை அவர்களே பின்நாட்களில் சிவன்கோவிலுக்கு தங்கத்தகடுமருவிய தூபியை இயற்றுவித்தார். என1884 ஆம் ஆண்டு "சைவாபிமானி" பத்திரிகை தெரிவிக்கின்றது இவ்வாறு காசிக்கு சென்று சிவலிங்கத்தைக்கொண்டு வந்த கப்பலின் பெயர் **"அன்னபூரணி'** இதனால் இக்கப்பல் பின்னர்"**காசிஅன்னபூரணி"** என அழைக்கப்பட்டது. விஸ்வநாதர் வாழ்ந்திருந்த வீட்டின் பெயரும் "அன்னபூரணி" ஆகும். வல்வெட்டித்துறை கிழக்குவீதியில் இலக்கம்84 இல் அமைந்திருக்கும் இக்காணியின் பெயரும் "விஸ்வநாதர்வளவு" என்பதாகும். விஸ்வநாதபிள்ளையின் மகனான சரவணமுத்துப்பிள்ளையின் மறைவின்பின் அவர்மனைவியாகிய **"சின்னத்தங்கம்"** உடையகாலத்திலும் மேற்கூறப்பட்ட கப்பல் வர்த்தகத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

இக்கோவிலை சிறப்புற அமைத்து வரும் வேளையில் 1877ம் வருடம் யாழ்ப்பாணக்குடாநாட்டில் பெரும் பஞ்சமும் வாந்திபேதிநோயும் ஏற்பட்டது. இறப்புக்கள் வேகமாக அதிகரிக்க உணவுப்பொருட்கள் கிடைப்பதே அரிதாகியது. பசியாலே பலர் பரிதாபமாக இறந்தனர். இக்காலத்தில் பர்மாவிலும் இந்தியாவின் பலபகுதிகளிலும் இருந்து அரிசி மற்றும் உணவுத்தானியங்களை கொண்டு வந்து குடாநாட்டு மக்களின் பஞ்சத்தைப் போக்குவதில் பெரியவர் பெருமுயற்ச்சி செய்தார். யாழ்ப்பாணமக்களிடைய வியாபார நோக்கில் வந்து குடியோறிய பல செட்டிமாரும் சுதேச பணமுதலைகளும் வறியோரை மேலும் வாட்டி தமது பணப்பைகளை நிரப்ப முற்பட்டபோது தனது சேமிப்புக்கிடங்கில் இருந்த அனைத்து அரிசியையும் தனது கப்பல்களில் வரும் அரிசியையும் பஞ்சமென வந்தவர்களுக்கு இல்லையெனாது அள்ளிக்கொடுத்த வள்ளல் இவர். இதன்மூலம் தன் பொருள் எல்லாம் இழந்தார். கோயில் கட்டுவதிலும் பலசிக்கல்கள் பொருளாதாரரீதியாக ஏற்பட்டன எனினும் இவருடைய தம்பியார் குழந்தைவேலு இராமசாமி மற்றும் ஒன்றுவிட்ட சகோதரன் விஸ்வநாதபிள்ளை என்பவர்களின் உதவியுடன் தனது தந்தையின் சொல்போலவே வல்வட்டித்துறைமண்ணில் சிவபிரானுக்கு உரிய கோவிலைக்கட்டடிமுடித்தார்.

காசியில் இருந்து பாணலிங்கமாக கொண்டுவரப்பட்ட இலிங்கேஸ்வரர் வல்வட்டித்துறையில் கோயிலில் பிரதிஸ்டை செய்யப்பட்ட பின் வைத்தீஸ்வரப்பெருமான் என்னும் பெயரைப்பெற்றார். இவருடன் எப்பெழுதும் கூடஎழுந்தருளியிருக்கும் அம்பிகையின் பெயர் வாலாம்பிகை. **“வாலாம்பிகா சமோத ஶ்ரீவைத்தீஸ்வரபெருமாள்”** தேவஸ்தானம் என இக்கோயில் அழைக்கப்படலாயிற்று.

கோயில் கட்டிமுடித்தபின் 08.06.1883 (சுபானுவருடம் வைகாசிமாதம் 27ம் திகதி வெள்ளிக்கிழமை) முதலாவது நூதனபிரதிஸ்டா கும்பாவிஷேகம் நடத்தப்பெற்றது. அக்காலத்தில் இலங்கையில் பிரபல்யமிக்க நா.குமாரசாமிக்குரக்களின் தலைமையில் மிகச்சிறப்பாக நடத்தப்பெற்ற இக்கும்பாபிஷேகத்தை தொடர்ந்து அன்றே ஆறுகாலப் பூசையையும் ஆரம்பமாயிற்று. புலோலியைச்சேர்ந்த சண்முகக்குருக்கள் கோவிலின் முதலாவது பூசகராக நியமிக்கப்பட்டார்.

சைவ ஆகமவிதிப்படி நடைபெறும் இப்பூசைகளை “ஆறுகாலப்பூசைகள்” என்பர் இவைபின்வருமாறு.

| | | |
|---|---|---|
| அதிகாலைப்பூசை | 5.45 மணி | அதிகாலை |
| காலைப்பூசை | 9.30 மணி | அதிகாலை |
| மத்தியானப்பூசை | 11.45 மணி | நன்பகல் |
| மாலைமுதற்காலப்பூசை | 6.00 மணி | பிற்பகல் |
| மாலைஇரண்டாம்காலப்பூசை | 7.30 மணி | முன்னிரவு |
| அர்த்தசாமம் | 8.30 மணி. | |

இக்கோவிலில் நடைபெறும் மகோஸ்சவம் எனப்படும் பிரமேற்சவம் 16 நாட்கள் என கணிக்கப்பட்டெனினும் மகோஸ்சவம் எனப்படும் இத்திருவிழாக்காலம் முழமையாக முடிவுற மூன்று வாரங்களாகும். இக்கோயிலில் தனியாக சூரியபூசை நடைபெறுவது போலவே சூரியக்கதிர்கள் இக்கோவிலின் மூலஸ்தானத்தில் மீது நேரடியாகப்படுகின்ற நிலையில் தெளிவான வானத்துடன் வெப்பம் மக்களை வாட்டாத பங்குனி மாதத்திலேயே மகோற்சவநாட்கள் பெரியவரால் தெரிவுசெய்யப்பட்டு இன்றுவரை நடைபெற்று வருகின்றன.

முதல்நாள் சிவன்கோவிலின் பிரதமகுரு கோவிலின் இடது புறத்தில் அமைந்திருக்கும் முத்தமாரியம்மன் கோவிலுக்க சென்று ஊரின்குலதெய்வமான முத்துமாரிக்கு தீபஅலங்காரத்துடன் விசேட அர்ச்சனைசெய்து சிவன்கோவிலின் மகேற்சவத்தைச் செய்வதற்கு தாயவளின் அனுமதியையும் ஆசியையும் பெற்றுக்கொள்ளும் நிகழ்வாக இது காணப்படுகின்றது. சிவனுக்கு தனிக்கோயில் அமைத்த பெரியவர் முத்துமாரிஅம்மன் கோவில் தர்மகத்தாவாக இருந்தவேளையிலேயே சிவன்கோயிலை நிர்மானித்தார்.

அப்பெருந்தாயின் அனுமதியைப்பெற்றே இன்றும் ஊரவர்கள் எக்காரியத்தையும் செய்வர். "அவள் அனுமதியின்றி எக்காரியமும் செய்தல் கூடாது. அனுமதியின்றிச் செய்தால் அக்காரியம் சித்திக்காது" என்பது பலகாலமாக எமது மண்ணில் தொடர்ந்து வரும் பெரு நம்பிக்கையாகும். இதனை உறுதிப்படுத்தும் தக்கசான்றாக இந்நிகழ்வை நாம்கொள்ளலாம். மறுநாள் மாணிக்கவாசகர் ஊர்முழுக்கச் சென்று சிவன்கோவிலின் கொடியோற்றத்திற்காக கட்டியம் கூறுவார். தொடர்ந்து வரும் அமாவாசைத்திதியன்று சிவபிரானின் கொடியேற்றத்திருவிழா வெகுவிமர்சியாக நடைபெறும் அன்றுமதல் மூன்று நாட்களுக்கு விநாயகப்பெருமானின் சக்தியை அதிகரிக்க விசேடபூசையும் தொடர்ந்து வரும் மூன்று நாட்களுக்கு முருகப்பெருமானுக்கும் வள்ளிதெய்வானைக்குரிய விசேடவழிபாடும் நடைபெறும் தொடர்ந்து வரும் நாட்களில் மகாயாகத்துடன் வசந்தமண்டபத்தில்சிவபெருமான் வலாம்பிகை விநாயகர் முருகன் சண்டேஸ்வரர் என்பவர்களுக்கும். விசேடபூசைகளுடன் மூலமூர்த்தி வழங்கும் சந்திரசேகரப்பட்டமும் வழங்கப்படும். இவ்வாறு தொடரும் மகோற்சவநாட்களில் பங்குனிப்பூரணை நாளுக்கு முன்நாளில் தேர்த்திருவிழாவும் இறுதிநாளான பூரணைநாள்காலையில் வெள்ளியிலான இடபவாகனத்தில் கோவிலுக்கு ஒருமைல் கிழக்குத்திசையில் அமைந்திருக்கும் ஊறணி தீர்தக்கடலாம் வங்கக்கடலில் சுவாமி தீர்த்தமாடுவார். பின்னர் நெடியகாட்டு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் கோவிலின் தங்கயிருந்து இரவு முழுநிலவில் உமையவளுடன் கல்யாணசமோதரராய் ஆலயம் திரும்புவார். அதன்பின் கொடியிறக்கம் நடைபெறும்.

இதற்.கு அடுத்தநாள் சிவபெருமான் உமாதேவி சுந்தரமூர்த்திநாயனார் பங்குகொள்ளும் ஊடல்திருவிழா நடைபெறும். அடுத்த நாள் சண்டேஸ்வரருக்கு சிறப்பான அலங்காரங்களுடன் குறிப்பாக உற்சமூர்த்திக்கு அணியப்பட்ட ஆபரணங்களையும் சண்டேஸ்வரருக்கு அணிவித்து இறைவன் வீதிஉலாவந்தவாகனம் என்னும் விமானத்தில் சிறப்பான அலங்காரங்களுடன் சண்டேஸ்வரர் வீதிஉலா வருவார். இறுதியில் ஆலவட்டம் கொடி என்பன மேளதாளம் நாதஸ்வரம் முழங்க சண்டேஸ்வரரைமையப்படுத்தி சுற்றிச்சுற்றி வருதல் கண்கொள்ளாக்காட்ச்சியாகும்.

இறுதிநாளில் வைரவர்மடை எனக்கூறப்படும் வைரவர்பூசை நடைபெறும் இத்திருநாளில் ஆலயத்தின் காவல் தெய்வமாக விளங்கும் வைரவருக்கு நடைபெறும் விசேடபூசையுடன் மகேற்சவ காலம் முடிவடையும்.

16வருடங்கள் தனது திரண்டசெல்வத்தையெல்லாம் செலவழித்து ஆகமஇதிகாசங்களுக்கு அமைய வல்வட்டித்துறை மக்களுக்காக வைத்தீஸ்வரப்பெருமான் என்னும் பெயரில் கோவில் அமைத்த "பெரியதம்பியார்" என்னும் திரு. வெங்காடசலம்பிள்ளை பிறப்பிலே கடல்வணிகராகப் பிறந்திருந்தார். எனினும் சிவன்கோவிலை பிரதிஸ்டாபிஷேகம் செய்தபின் சிவதீட்சைபெற்று உருத்திராட்சமாலை அணிந்து நாள்முழுதும் மேலாடையற்ற உடலில் திருநீறணிந்து எந்நிலையிலும் சிவமந்திரம் ஓதும் சிவனடியாராகவே மாறியவர். அவ்வாறே தன் இறுதிநாள்வரை கழித்தவர்!

வல்வட்டித்துறை மக்களிற்க்கும் அதன் அயலூர் மக்களுக்கும் தன்திரண்ட செல்வங்களை எல்லாம் அள்ளிக்கொடுத்த வள்ளல் திரு. வெங்கடாசலம்பிள்ளை அம்மக்ககளின் அருட்கொடைக்காக ஆண்டவனின் சன்னிதானத்தையும் அமைத்துக் கொடுத்தார்.

இவரின் அள்ளிக்கொடுக்கும் வள்ளண்மையைக்"வல்வைக்கலித்துறை" பாடிய எமது அயலூரான உடுப்பிட்டியைச்சேர்ந்த சிவசம்புப்புலவர் உயர்ந்தும் வியர்ந்தும் பாடியுள்ளார். 1829 – 1910ம் ஆண்டுகளை தனது வாழ்க்கைக்காலமாக கொண்டிருந்த உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் நாவலரின் கடினநடைப்பிரசங்களையும் எளிய நடையில் சாதாரணமக்களும் விளங்கும்படி விளக்கிக்கூறும் அற்புத சொல்லாட்சி மிக்கவர். இத்தகைய சிறப்புமிக்க இவர் வல்வட்டித்துறை வைத்திஸ்வரன்கோவில் பிரதிஸ்டை செய்யப்பட்டதன்பின் பாடிய வல்வைக்கலித்துறையில்.

நீதிமரபிற்றிருத் தொண்டரோடு திகழும் பத்திச்
சோதிமலர் முகவெங்கடாசலத்துங்க வள்ளல்
புாதிமதிச் சடையான் தேவி யோடு பயிலத்தந்த
சேதிமமொன்றையும் வல்வைச் சீரைத் தெரிந்திடவே

விண்ணியல் செல்வத்தின் மண்ணியல் செல்வமிதக்கத் துய்க்க
புண்ணிய சீலத்திருவெங்கடாசலம் பூபன்வந்து
நுண்ணிவான் குலத்தார் வாழும் வல்வை நகரினுாடங்
கோண்ணியல் போக நகர் வேறிங்கியாவதி சைந்திடவே
…………………………………………..

கார்காமர் கண்டத்து நம் வைத்தியேசர் கருணையினாற்
தீர்காயுளு மிட்டிசித்தியுமெய்திச் செறிந்தருள
நீர்க்காகலெலா முத்த சங்கினமுர்ந்து நிறைந்த வல்வை
ஊர்க்காவவலர்வைகிலெங்களுக்கே பெரிநூதியமே!**……….**

எனப்பாடியுள்ளமை 19ம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் வல்வட்டித்துறையில் வாழ்ந்த மக்களின் சிறப்பையும் அவர்களின் முதல்வனாகவும் முழமையாகவும் திகழ்ந்த வெங்கடாசலம்பிள்ளையின் சீரையும் சிறப்பையும் தெரிந்து கொள்ள இது ஒன்றே போதுமானது. அல்லவா!**……….**

வல்வட்டித்துறையில் வைத்தீஸ்வரர் கோவிலை அமைத்ததுடன் அபிசேக ஆராதனை புரியும் அந்தணப்பெருமக்கள் தமது குடும்பத்துடன் தங்கி வாழ்வதற்காக கோயிலின் தெற்குவீதியில் குடிமனை ஒன்றையும் அமைத்துக் கொடுத்தார். இதேபோல காலம் தவறாது கோவிலில் தேவாரதிருவாசகங்களையும் பாடும் “ஓதுவார்” களுக்காக கோவிலின் தென்மேற்கு மூலையில் ஒரு குடிமனையையும் அமைத்தார். இன்றும் கூட ஓதுவார் வீடு என்பது அடையாளம் காணக்கூடியவாறே காணப்படுகின்றது. இவ்வாறு ஆலயத்தின் நித்திய கருமங்களக்க இடையூறு ஒன்றும் நேராது கவனித்துக்கொண்டார்.

கோவிலின் நித்தியபூசைகளின் போது நாதஸ்வரகானம் இசைப்போர் சிவமந்திரத்திற்கு கட்டியம்கூறும் மேளம் அடிப்போர் மற்றும் ஆஸ்தானவித்துவான்களை இந்தியாவில் இருந்து வரவழைத்து கோவிலுக்கு அன்மையில் தனக்குரிய காணியில் அவர்களை வாழச்செய்தார் (இக்காணியிலேயே பின்நாட்களில் குமரகுரு மீன்பதனிடும் நிலையம் அமைந்திருந்தது) அத்துடன் எப்பொழுதும் தெய்வங்களையே மயக்கும் ஆஸ்தான புல்லாங்குழல் விற்பனரையும் சேவைக்கு அமர்த்தி இருந்தார். மக்களுக்கு அருள் புரியும் ஆண்டவன் வாழும் கோயில் என்பது அனைத்து தேவைகளையும் தன்னகத்தே கொண்டதாக இருக்கவேண்டும். அதுவே பூரணமான கோயிலாகும். அதற்கேற்பவே வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரர் கோயிலை அமைத்திருந்தார். பெரியவர் வெங்கடாசலம்பிள்ளை அவர்கள்.

கடல்வணிகனாய்ப் பிறந்து கடலோடியாய் வாழ்ந்த போதும் கோவிலின் தேவைக்கான நெல்லைத்தானே உற்பத்தி செய்துகொண்டார். கோயிலிற்கு அருகாமையில் இருந்த தீருவில் வயலில் சிவன்கோவிலைச் சார்ந்தவர்களினால் உற்பத்தி செய்யப்படும் நெல்லின் கதிர்அறுப்பென்பது பெரும் திருவிழாவாக கொண்டாடப்படும். ஒவ்வொரு தைப்பொங்கலிற்கு அடுத்தநாள் கோவிலில் இருந்து வயலிற்கு செல்லும் மாணிக்கவாசகப்பெருமான் கதிர்அறுப்பில்ஈடுபடுவார். நாள் முழுக்க அறுவடைசெய்தபின் அறுவடை செய்த நெல்லுடன் பிற்பகலில் மாணிக்கவாசகப்பெருமான் கோவிலுக்குத்திரும்புவார். “புதிர்எடுத்தல்”என்னும் பெயரில் வெங்கடாசலாம்பிள்ளையால் நடத்தப்பெற்று வந்த இந்தநிகழ்வும் திருவிழாவும் திரு சபாரத்தினம் எசமான் காலம்வரையில் கொண்டாடப்பட்டதெனினும் பின்பு ஏனொ கைவிடப்பட்டுவிட்டது.

தனது தந்தையின் கனவையும் ஊர்மக்களின் தேவைகளையும் நாடிப்பிடித்தறிந்த வெங்கடாசலம் பிள்ளையவர்கள் ஆகமவிதிக்கமைய சிவன்ஆலயம் அமைத்ததுடன் தனது சமூகக்கடமை முடிந்துவிட்டது என எண்ணாமல் வல்வட்டித்துறைமக்கள் தொடர்ந்து ஆசாரசீலராய் இருக்கவும் வாழவும் வழிவகுத்தார். பத்தென்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் 1883ம் ஆண்டில் சிவன் கோவில் நிர்மாணம் செய்யப்பட்டதன்பின் சிவபூமியாக விளங்கிய வல்வட்டித்துறையில் சிவனின் வாகனமானதும் பூசைக்கேற்றதுமான “கோமாதா” என அழைக்கப்பட்ட பசுவதையை முற்றுமுழுதாக தடைசெய்தார். சமூகத்தில் தனக்கிருந்த “எசமான” என்னும் தலைமைப்பதவியின் பெயரால் எந்தவித கண்டிப்பையும் காட்டாத பெரியவர் உணவுக்காக மாடுவெட்டுவதற்கு கடும் எதிர்ப்பைக் காட்டி அதனை மறுத்தார். அன்று முதல் இன்று வரை வல்வட்டித்துறையில் இறைச்சிக்காக மாடுவெட்டப்படுவதில்லை. பர்மாவிலும் இந்தியாவின் பலபகுதிகளிலம் இருந்து வல்வை மக்களினால் கப்பலில் கொண்டு வரப்படும் அரிசி தேங்காய் சிறு தானியங்கள் என்பன வற்றைக் கொள்பனவு செய்யவரும் பல ஊர் வியாபாரிகளும் உள்ளூர் மீனவர்களினால் பிடிக்கப்படும் மீன்களை வாங்கவரும் சிறுவியாபாரிகளும் கலந்து வல்வட்டித்துறையில் தங்கமுற்படுவதால் ஏற்படும் பல்சமூகச்கலாச்சாரம் தான் நேசித்த தனித்துவம்மிக்க “சமூகம் என்னும் குடும்பம்”ஆன வல்வெட்டித்துறையில் எதிற்காலத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்னும் தீர்க்கதரிசனத்தில் வியாபார நேக்கமாகவோ அல்லது வேறெந்த காரணங்களுக்காக வல்வெட்டித்துறைக்குள் எவர் வந்தாலும் இரவுப்பொழுதுக்கு முன் ஊரைவிட்டு போய்விட வேண்டும் என்பதிலும் சமூகத்தலைவரான பெரியவர் வெங்கடாசலம்பிள்ளை எந்த சமரசத்தையும் ஏற்றக்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே வல்வட்டித்துறை மக்கள் என்பது பல்லின சமூகமோ அல்லது ஓருசமூகமோ என்றில்லாமல் ஒரு குடும்பம் என்பதே ஒரு ஊராக இன்றுவரை நின்று நிலவுகிறது (இதனால்தான் வல்வட்டித்துறை என்னும் ஒரு குடும்பத்தில் இருந்து வந்து உலகத்தமிழரையே “தமிழ்த்தேசியம்” என்னும் ஒரு கொடியின் இணைத்த பெரும்தலைமையை நாம்காண முடிந்தது)

தான் வாழும் போது மட்டுமல்லாமல் தான் வாழ்ந்த காலத்தின் பின்னும் சீரான பாதையில் ஒரு சமூகத்தின் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டுவது என்பது இலகுவானதல்ல. ஓரிரு வருடங்கள் அல்ல 100வருடங்களுக்கு மேல் நீண்ட தான்…. தனதுசமூகம் என்னும் அவருடைய நேரிய பாதை என்பது அவருக்கு முன்பிருந்ததைவிட அவரது சமகாலத்தைவிட அவருக்குப்பின் எமது மண்ணிற்கு அதி உயர்ந்த பெரும் கௌரவத்தை பெற்றுக்கொடுத்தது என்றால் மிகையாகாது அதனால் தான் 1822ம் ஆண்டில் அவதரித்த அவரின் வாழ்க்கையை இன்றும் நாம் தேடுகின்றோம்.

பெரியவர் தான் தேடிய சொத்துக்களையும் நிலபுலங்களையும் தான் கட்டிய கோவிலின் பெயரில் எழுதிவைத்து அக்கோயிலானது எக்காலத்திலும் நெறிபிரளாது இருப்பதற்காக அதன் நிர்வாகத்தை மட்டுமே தொடரும் தனது ஆண்சந்ததிக்காக எழுதிவைத்தார். இதன்மூலம் பல ஏக்கர் நிலங்கள் பின்வந்த காலங்களில் இவரது பரம்பரையினருக்கு பயன்பட்டதைவிட கோயில்க்காணி என்னும் பெயரில் யார் யாரோஎன சமூகத்தின் பலதரப்பட்வர்களுக்கும் பயன்பட்டன. 1956ம் ஆண்டில் முல்லைத்தீவில் நீரில்மூழ்கிய நிலையில் இருந்த ஆங்கிலேயக்கப்பலான **“king** OF **atlatic”** கப்பலை வாங்கிய காலத்தில் ஆங்கிலேயஅரசினரிடமிருந்து இவரால் விலைக்குவாங்கப்பட்டிருந்த வற்றாப்பளைமுதல் இரட்டைவாய்க்கால் வரையிலான நந்திக்கடலின் கிழக்கு மற்றும்தெற்குப் பகுதிகளில் இருந்த காணிகளும் தென்னந்தோப்புகளும் என90 ஏக்கர் வரையானநிலங்களில் பலவும் பின்வந்தகாலங்களில் உரிமைகேரப்படாத நிலையில் பின்வந்த அரசாங்கத்தினாலும் தனியார்களினாலும் சுவீகரப்படுத்தப்பட்டமை தனக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்த இவரின் பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டான உதாரணமாகலாம்?

வல்வெட்டித்துறையின் **“சமூகத்தலைவராக”** விளங்கிய வெங்கடாசலம்பிள்ளையின் சொந்த நிலத்திலேயே அவர் வழியில் வந்து ஈழத்தமிழினத்தின் **“தேசியத்தலைவராக”** உயர்ந்த வேலுப்பிள்ளை பிரபாகரனது புகழுடலையும் கண்டெடுத்தது எனக்கூறமுற்படுவது எதன் தொடர்ச்சி**!** வரலாறுகள் மீண்டும் வரும் என்பதற்கு இவர்களின் வாழ்க்கையே சாட்சி.

“History of Valvai” to continue….